பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
21 06 2025 **SATURDAY** 7 15 **PM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. வயது மற்றும் எல்லைகளை கடந்து, அனைவருக்குமான வாழ்வியல் முறையாக யோகா திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. வருங்கால தலைமுறையினரின் ஆரோக்கிய வாழ்விற்கு யோகக்கலை வரப்பிரசாதமாக அமைந்துள்ளது என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

3. ஆப்பரேஷன் சிந்து நடவடிக்கையின் மூலம் ஈரானிலிருந்து இன்று 310 இந்தியர்கள் தாயகம் அழைத்து வரப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. மத்திய ஆப்பிரிக்க நாடான காங்கோவில் நேரிட்ட சுரங்க விபத்தில் 20 பேர் உயிரிழந்துள்ளனர்.

5. இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது நாளான இன்று இந்தியா தனது முதல் இன்னிங்ஸில் 471 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

>>>>>>><<<<<<<

எல்லைகளை கடந்து, அனைவருக்குமான வாழ்வியல் முறையாக யோகா திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

விசாகப்பட்டினத்தில் இன்று நடைபெற்ற சர்வதேச யோகா தின நிகழ்ச்சியில் பங்கேற்று பேசிய அவர், உடல் ஆரோக்கியம் மற்றும் மன அமைதிக்கு யோகக்கலை அருமருந்தாக உள்ளது என்று கூறினார்.

உலகின் ஆரோக்கியத்திற்கான யோகா என்பதை மையக் கருத்தாக கொண்டு இந்த ஆண்டுக்கான சர்வதேச யோகா தினம் கொண்டாடப்பட்டது. இந்த யோகா தின நிகழ்ச்சியில், 28 கிலோமீட்டர் நீளம் வரை மக்கள் பங்கேற்று யோகா பயிற்சியை மேற்கொண்டு, கின்னஸ் சாதனை படைத்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த தினத்தை ஒட்டி, நினைவு தபால்தலையையும் பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டார்.

டேராடூனில் நடைபெற்ற யோகா தின கொண்டாட்ட நிகழ்ச்சியில் பங்கேற்று பேசிய குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, யோக கலைக்கு உலக அளவில் வரவேற்பு அதிகரித்து வருவதாக கூறினார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா, யோகக்கலை உடல்நலன் மட்டுமின்றி மனநலத்திற்கும் உதவுவதாக கூறினார்.

ஜம்மு காஷ்மீரின் உதம்பூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், ராணுவ தளபதி ஜெனரல் உபேந்திர திரிவேதி ஆகியோர் பங்கேற்று யோகா பயிற்சியை மேற்கொண்டனர்.

குஜராத் மாநிலம், அஹமதாபாதில் நடைபெற்ற யோகா தின நிகழ்ச்சியில் மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா பங்கேற்றார்.

அம்மாநிலத்தில் 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இடங்களில் நடைபெற்ற யோகா தின நிகழ்ச்சிகளில் ஒரு கோடிக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

ஒடிசா மாநிலம், சம்பல்பூரில் நடைபெற்ற யோகா தின நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான், உலகிற்கு இந்தியா அளித்த கொடை யோகா என்று பெருமிதம் தெரிவித்தார்.

புதுதில்லியில் நடைபெற்ற யோகா தின நிகழ்ச்சியில், மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கலந்து கொண்டு யோகா பயிற்சியை மேற்கொண்டார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், உடல் ஆரோக்கியத்தை பராமரிக்க அன்றாடம் யோகா பயிற்சியை மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்று கூறினார்.

நீண்டகால நலவாழ்விற்கு யோக பயிற்சியை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும் என்று திரு. சிவராஜ் சிங் சௌஹான் வலியுறுத்தினார்.

நாடுமுழுவதிலும் உள்ள பாரம்பரிய நினைவுச் சின்னங்கள் அமைந்துள்ள தலங்களில் சர்வதேச யோகா தினம் கொண்டாடப்பட்டது.

நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற யோகா தின நிகழ்ச்சியில் மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா கலந்து கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், உடல், மனம், ஆன்மா ஆகியவற்றை ஒன்றிணைக்கும் சக்திவாய்ந்த கருவியாக யோகா திகழ்கிறது என்று தெரிவித்தார்.

மக்கள் அனைவரும் யோக கலையை வாழ்வில் ஒரு அங்கமாக கடைபிடிக்க வேண்டும் என்றும் திரு. ஓம் பிர்லா கேட்டுக் கொண்டார்.

நாடுமுழுவதும் நடைபெற்ற யோகா தின நிகழ்ச்சியில், ஒன்பது லட்சத்திற்கும் மேற்பட்ட தேசிய மாணவர் படையினர் ஒரே நேரத்தில் யோக பயிற்சியை மேற்கொண்டனர்.

தமிழகத்தில் ஈரோடு மாவட்டம், திண்டல் தனியார் கல்லூரியில் நடைபெற்ற யோகா தின நிகழ்ச்சியில் பங்கேற்ற மாணவர்கள், ஞாபக சக்தி அதிகரிக்கவும், மனஅழுத்தம் குறைவதற்கும் யோக கலை பயன் அளிப்பதாக உள்ளது என்று தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் மாணவிகள் 35 செகண்ட்ஸ்)

சர்வதேச யோகா தினம் 175 நாடுகளில் இன்று கொண்டாடப்பட்டது.

>>>>>><<<<<<<

வருங்கால தலைமுறையினருக்கு யோகக்கலை வரப்பிரசாதமாக அமைந்துள்ளது என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் திருவண்ணாமலையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், உடல் மற்றும் மனநலனை காப்பதில் யோகா முக்கியப் பங்கு வகிப்பதாக கூறினார்.

(சவுண்ட் பைட் - எல். முருகன் 45 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<<

பெண்கள் மற்றும் குழந்தைகள் நலனுக்கான திட்டங்களை யோகாவுடன் ஒருங்கிணைக்க வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திருமதி. அன்னபூர்னா தேவி வெளியிட்டுள்ள கட்டுரையை பகிர்ந்துள்ள பிரதமர், சுகாதாரம் மற்றும் நல வாழ்விற்கான திட்டங்கள், அடிப்படை நிலையிலிருந்து மேம்படுத்தப்பட்டு வருவதை சுட்டிக்காட்டியுள்ளார்.

>>>>>><<<<<<<

மத்திய ஆப்பிரிக்க நாடான காங்கோவில் சுரங்கம் ஒன்றில் ஏற்பட்ட விபத்தில் 20 பேர் உயிரிழந்துள்ளனர்.

வடக்கு கிவு மாகாணத்தில் மசிசி பகுதியில் இந்த சுரங்கத்தில் நேற்று ஏற்பட்ட விபத்தில் இதுவரை 19 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும், இதுவரை 100 பேர் மீட்கப்பட்டுள்ளதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

விபத்துக்கான காரணம் குறித்து விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

>>>>>><<<<<<<

ஈரானில் சிக்கித் தவித்து வரும் இந்தியர்களை மீட்கும் பணியில், மத்திய அரசு மேற்கொண்டு வரும் ஆப்பரேஷன் சிந்து நடவடிக்கையின் ஒரு பகுதியாக 310 பேர் இன்று புதுதில்லி வந்தடைந்தனர்.

இதுவரை மொத்தம் 827 இந்தியர்கள் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, இந்தியர்களை பத்திரமாக தாயகம் அழைத்து வருவதில், டெஹ்ரானில் உள்ள இந்திய தூதரகம் தொடர்ந்து நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில், ஈரானில் சிக்கியுள்ள இலங்கை மற்றும் நேபாளத்தைச் சேர்ந்தவர்கள் இந்திய தூதரகத்தை தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இக்கட்டான தருணங்களில் அண்டை நாடுகளைச் சேர்ந்த மக்களுக்கும் உதவிக்கரம் நீட்டும் வகையிலும், மனிதாபிமான அடிப்படையிலும் மத்திய அரசு இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

>>>>>><<<<<<<

இஸ்ரேல் – ஈரான் இடையே தொடர்ந்து ஒன்பதாவது நாளாக வான்வழி தாக்குதல் நடைபெற்று வருகிறது.

ஈரானில் உள்ள அணுஆயுத கட்டமைப்புகள் மீது இஸ்ரேல் ராணுவம் தாக்குதல் நடத்தி வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த தாக்குதலில் ஈரான் படைப்பிரிவு தலைவர் **Saeed Izadi** கொல்லப்பட்டுள்ளதாக இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, இஸ்ரேலின் தென்பகுதியில் உள்ள **Beersheva** மற்றும் **Haifa** பகுதிகளில் உள்ள ஏவகணை தலங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக ஈரான் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<<

உத்ராகண்ட் மாநிலத்தில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் அடுத்த மாதம் 10ஆம் தேதி நடைபெறவுள்ளது.

இதற்கான தேர்தல் அறிவிக்கையை அம்மாநில தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

வேட்புமனு தாக்கல் இம்மாதம் 25ஆம் தேதி தொடங்கும் என்றும் அம்மாநில தேர்தல் ஆணையர் திரு. சுஷில்குமார் தெரிவித்துள்ளார்.

வேட்புமனு தாக்கலுக்கான கடைசி நாள் இம்மாதம் 28ஆம் தேதியாகும்.

>>>>>><<<<<<<

பீகார் மாநிலத்தில் மூத்த குடிமக்கள், விதவைகள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான ஓய்வூதியத்தை அதிகரிக்க அம்மாநில அரசு முடிவு செய்துள்ளது.

இதுதொடர்பாக அம்மாநில முதலமைச்சர் திரு. நிதிஷ்குமார் வெளியிட்டுள்ள அறிக்கையில், சமூக பாதுகாப்பு ஓய்வூதிய திட்டத்தின் கீழ், மாதந்தோறும் தற்போது 700 ரூபாய் வழங்கப்பட்டு வருவதாகவும், இது அடுத்த மாதம் முதல் ஆயிரத்து 100 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<<

இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இரண்டாவது நாளான இன்று இந்தியா தனது முதல் இன்னிங்ஸில் 471 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

>>>>>><<<<<<<

துனிஷியா சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் பிரஜ்வால் தேவ் - நிதின்குமார் சின்ஹா இணை பட்டம் வென்றது.

>>>>>><<<<<<<

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் நெல்லை - கோவை அணிகளுக்கு இடையேயான போட்டி தற்போது நெல்லையில் நடைபெற்று வருகிறது.

>>>>>><<<<<<